பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 03 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- குஜராத் மாநிலத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று ஜூனாகத்தில் தேசிய வனவிலங்கு வாரியத்தின் ஏழாவது கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.
- பெல்ஜியத்துடன் , செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், தூய்மை எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து அந்நாட்டு பிரதமருடன் தாம் இன்று ஆலோசனை நடத்தியதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- தில்லி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இம்மாதம் 24-ஆம் தேதி தொடங்கி 26-ஆம் தேதி வரை நடைபெறும் என்று முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.
- திரைப்படத் துறையில் உயரிய விருதாக கருதப்படும் ஆஸ்கர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் - உத்தரப்பிரதேச அணிகள் மோதுகின்றன.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

குஜராத் மாநிலத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி இரண்டாம் நாளான இன்று ஜூனாகத் மாவட்டத்.தில் உள்ள சாசன் கிர் பகுதியில் தேசிய வனவிலங்கு வாரியத்தின் ஏழாவது கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் பல்வேறு மாநிலங்களின் பிரதிநிதிகள், தன்னார்வ அமைப்பு பிரதிநிதிகள், வனவிலங்கு காப்பகத்தின் பாதுகாவலர்கள் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

ஜூனாகத்தில் புதிதாக கட்டப்பட உள்ள தேசிய வன விலங்கு சேவை மையத்துக்கான அடிக்கல்லையும் அவர் நாட்டினார்.

16-வது ஆசிய சிங்கம் கணக்கெடுப்புப் பணியையும் அவர் தொடங்கி வைத்தார்.

கோயம்புத்தூரில் உள்ள மனித - வன விலங்கு மோதல் தடுப்பு நிர்வாக கட்டமைப்பையும் திரு நரேந்திரமோடி காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

வனவிலங்கு வாரிய கூட்டத்திற்கு முன்னதாக பிரதமர் கிர் தேசிய பூங்காவில் வனவிலங்குகளை வாகனத்திலிருந்து பார்வையிட்டார்.

சதன் வளாகத்தில் மரக்கன்று நடும் பணியையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.

வனவிலங்குகளைப் பார்வையிடுவதற்கான இருசக்கர வாகன அணி கண்காணிப்பு பணியையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.

சுற்றுச்சூழல் ஆலோசகர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுடன் திரு நரேந்திரமோடி கலந்துரையாடினார்.

[]<<<>>>[]

உலக வன உயிரின தினம் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி வன உயிரின பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இதையொடிட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் நமது பூமியில் உள்ள பல்லுயிர்களை பேணி பாதுகாக்க உறுதியேற்போம் என கூறியுள்ளார்.

உலகில் உள்ள ஒவ்வொரு உயிரினமும் பல்வேறு வகைகளில் முக்கிய பங்கு வகிப்பதாகக் குறிப்பிட்டுள்ள பிரதமர், வருங்கால சந்ததியினருக்காக அவற்றைப் பாதுகாப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

வன உயிரினங்களை பாதுகாப்பதில் இந்தியாவின் பங்களிப்பு பெருமிதம் அளிப்பதாகவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

தில்லி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இம்மாதம் 24-ஆம் தேதி தொடங்கி 26-ஆம் தேதி வரை நடைபெறும் என்று முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்த அவர், பட்ஜெட் மீதான எதிர்பார்ப்புகள் குறித்து மக்கள் தங்கள் கருத்துக்களை பதிவிடுவதற்கான மின் அஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணையும் வெளியிட்டார்.

பெண்களுக்கான நிதி உதவி, சுகாதார சேவையின் விரிவாக்கம், பொதுப்போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல், மாசுபாட்டை குறைத்தல், வேலைவாய்ப்பு, முதியோருக்கான உதவி, யமுனை ஆற்றை தூய்மைப்படுத்துதல் உள்ளிட்ட முக்கிய அம்சங்களுடன் பட்ஜெட் இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

பட்ஜெட் குறித்த கருத்துக்களைத் தெரிவிக்க பல மகளிர் குழுக்கள், கல்விக் குழுக்கள், வர்த்தகர்கள் ஆகியோரும் அழைக்கப்பட்டிருப்பதாகவும் திருமதி ரேகா குப்தா கூறினார்.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டுமென்ற நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றித்தர மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்கா தெரிவித்துள்ளார்.

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளான இன்று அவர் ஆற்றிய உரையில், இது குறித்து அனைத்து தரப்பினரிடமும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

அது வரை ஜம்மு-கஷ்மீருக்குத் தேவையான உதவிகளை செய்து தருசவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

கஷ்மீர் பண்டிட்களை திரும்ப அழைத்து வருவதற்கான பாதுகாப்பான சூழல் ஏற்படுத்தித் தரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜம்மு-கஷ்மீரில் பஞ்சாயத்து மற்றும் நகர்புற உள்ளாட்சி கட்டமைப்புகளுக்கு உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும் என்றும் துணைநிலை ஆளுநர் தமது பட்ஜெட் உரையில் தெரிவித்தார்.

[]<<<>>>[]

பெல்ஜியத்துடன் வர்த்தகம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், தூய்மை எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து அந்நாட்டு துணை பிரதமர் திரு Maxime prevot -

வுடன் தாம் இன்று ஆலோசனை நடத்தியதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இரு நாடுகளுடனான நட்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று கூறிய திரு ஜெய்சங்கர் பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம், தொழில், கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் நெருங்கிய நட்புறவு இருந்து வருவதாகக் கூறினார்.

இன்றைய பேச்சுக்களின்போது செமிகண்டக்டர் உள்ளிட்ட துறைகளிலும் ஒத்துழைப்பது குறித்து பேச்சு நடததியதாகத் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் பெல்ஜியம் நாட்டின் இளவரசியை சந்தித்து பேச உள்ளதகாவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.,

[]<<<>>>[]

இந்தியா – அமெரிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இன்று அமெரிக்கா புறப்பட்டுச் செல்கிறார்.

வாஷிங்டனில் அவர் அந்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. Howard Lutnick உளளிட்டோருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி அண்மையில் மேற்கொண்ட அமெரிக்கப் பயணத்தின்போது இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தகம் 2030ஆம் ஆண்டுக்குள் 500 பில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்கப்படும் என அறிவித்த நிலையில், திரு. பியூஷ் கோயலின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

[]<<<>>>[]

தமிழகத்தில் நாடாளுமன்ற தொகுதி வரையரை தொடர்பாக வரும் ஐந்தாம் தேதி அழைப்பு விடுக்கப்பட்டுள்ள அனைத்துக்கட்சி கூட்டத்தில் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்க வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாகப்பட்டினத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்பதை அரசியலாக பார்க்க வேண்டாம் என்றும்,

இதில் பங்கேற்க முடியாது என்று கூறியவர்கள் தங்கள் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டும் வகையிலும், மாநிலத்தின் நலனை கருத்தில் கொண்டு அனைத்துக் கட்சியினரும் கூட்டத்தில் பங்கேற்குமாறு திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் 12-ஆம் பொதுத் தேர்வுகள் இன்று தொடங்கியது.

இம்மாதம் 25-ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த தேர்வை எட்டு லட்சத்து 21 ஆயிரத்து 57 மாணவர்கள் எழுதுகின்றனர்.

12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வை எழுதும் மாணவர்களுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்தியில், இந்த தேர்வு மாணவர்களின் உயர்கல்வி வாழ்க்கைக்கான நல்லதொரு அடித்தளமாக அமைந்திட இறைவனை பிரார்த்திப்பதாக திரு எல் முருகன் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

திரைப்படத் துறையில் உலகின் உயரிய விருதாக கருதப்படும் ஆஸ்கர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற்ற விழாவில் சிறந்த நடிகருக்கான விருது The Brutalist படத்தில் நடித்த Adrien Brody-க்கும், சிறந்த நடிகைக்கான விருது Anora படத்தில் நடித்த Mikey Madison-க்கும் வழங்கப்பட்டது.

Anora திரைப்படம் சிறந்த இயக்குநர் உள்ளிட்ட 5 விருதுகளைப் பெற்றுள்ளது.

சிறந்த துணை நடிகருக்கான விருதை Kieran Culk-கும், சிறந்த துணை நடிகைகக்கான விருதை Zoe Saldana–வும் பெற்றனர்.

சிறந்த ஆவணப் படத்திற்கான விருது No Other Land படத்திற்கும், சிறந்த குறும்படத்திற்கான விருது I am not a Robot படத்திற்கும் வழங்கப்பட்டது.

[]<<<>>>[]

அமெரிக்காவுடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கனிம வள ஒப்பந்தத்தை மீண்டும் தொடர உக்ரைன் தயாராக இருப்பதாக அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு Keir starmer உக்ரைனுடனான ஒத்துழைப்பு குறித்து வெளியிட்ட அறிவிப்புக்குப் பின் திரு ஜெலன்ஸ்கி தமது நாட்டின் நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

இதனிடையே இது குறிதது கருத்து தெரிவித்த அமெரிக்காவின் நிதி அமைச்சர் திரு ஸ்காட் பெசன்ட், கனிம வள ஒப்பந்தம் குறித்து ரஷ்யாவின் நிலைப்பாடு உறுதி செய்யப்பட்ட பிறகே இதனை தொடர முடியும் என்று தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

நாடு முழுவதும் உள்ள மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலைப் பட்டப்படிப்புகளில் சேர்வதற்கான CUET தேர்வு வரும் மே மாதம் 8ஆம் தேதி முதல் ஜூன் ஒன்றாம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் இத்தேர்வுக்கு ஆன்லைன் மூலம் இம்மாதம் 22ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு விண்ணப்பதாரர் அதிகபட்சமாக 5 பாடங்கள் வரை விண்ணப்பிக்கலாம்.

அதற்கு மேற்பட்ட பாடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் - உத்தரப்பிரதேச அணிகள் மோதுகின்றன.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து கால்பந்து போட்டியின் இன்றைய ஆட்டத்தில் சென்னை அணி — ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]